**ஜனவரி – 17**

# TNPSC துளிகள்

- பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 'சென்னை சங்கமம் - நம்ம ஊர் திருவிழா' எனப் படும் வருடாந்திரக் கலாச்சார விழாவானது சென்னையில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- மனைவி / பெற்றோர் / குழந்தைகளின் இறுதிச் சடங்கில் பங்கேற்கும் கைதியின் ஒரு உரிமையானது இந்திய அரசியலமைப்பின் 25வது சரத்தின் வரம்பிற்குள் வரும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர்களின் 25வது தேசிய மாநாடு ஆனது பெங்களூருவில் நடத்தப் பட்டது.
- ஸ்ரீநகர் வானிலை ஆய்வு மையம் ஆனது, உலக வானிலை ஆய்வு அமைப்பினால் (WMO) நூற்றாண்டு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- என்விடியா நிறுவனமானது ஜெட்சன் ஓரின் நானோ சூப்பர் எனப்படும் தனது புதிய சிறிய செயற்கை நுண்ணறிவு (AI) மீத்திறன் கணினியினை மிகச் சமீபத்தில் அறிமுகப் படுத்தியது.

# தேசியச் செய்திகள்

## மௌசம் திட்டம் 2025




- இந்திய நாட்டினை பல்வேறு வானிலை சூழல்களுக்கு ஏற்ற நிலையில் மிகவும் நன்கு தயாரானதாகவும் மற்றும் பருவநிலைக்கு ஏற்ற வகையிலான ஒரு தேசமாக அதனை மாற்றுவதற்காக 'மௌசம் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது.
- இத் திட்டத்தின் தொடக்கமானது, இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 150வது ஸ்தாபன தினக் கொண்டாட்டங்களை ஒட்டி நடைபெற்றது.
- வானிலை அமைப்புகளில் அதிகரித்து வரும் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தினை எதிர்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மிகக் குறுகிய மற்றும் நடுத்தர வரம்பிலான முன்னறிவிப்புகளை மேம்படுத்துவதிலும், கடுமையான வானிலை நிகழ்வுகளுக்கான தயார்நிலையை அதிகரிப்பதிலும் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.
- இது முன்னறிவிப்புகளின் துல்லியத் தன்மையினை மேலும் 5 முதல் 10 சதவீதம் வரை அதிகரிக்கிறது என்பதோடு மேலும், பஞ்சாயத்து அமைப்புகள் நிலை வரையில் 10 முதல் 15 நாட்களுக்கு முன்னதாக கணிப்புகளை வழங்குவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

## நாக் Mk-2 சோதனை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட நாக் மார்க்-2 எனப்படும் பீரங்கி எதிர்ப்பு எறிகணையின் கள மதிப்பீட்டுச் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- நாக் மார்க்-2 என்பது ஒரு முறை அது செலுத்தப்பட்டப் பிறகு எந்த ஒரு தொழில்நுட்ப உதவியும் தேவைப்படாத வகையில் தாக்குதல் திறன் கொண்ட மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பத்திலான ஒரு பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை ஆகும்.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது தாக்குதல் மேற்கொள்ளும் தரப்பு அதனை ஏவுவதற்கு முன்னதாக இலக்குகளை அடைவதன் மீது கவனம் செலுத்த உதவுவதால், சிக்கலான போர்க்கள சூழ்நிலைகளில் கூட துல்லியமான தாக்குதல்களை இது உறுதி செய்கிறது.





## ஆயுஷ்மான் பாரத் – ஒடிஸா

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) என்ற திட்டத்தினை அமல்படுத்தியுள்ள 34வது மாநிலமாக ஒடிசா மாறியுள்ளது.
- இதுவரையில், ஒடிசாவும் இதர இரண்டு மாநிலங்களும் இந்தத் திட்டத்தினை இன்னும் செயல்படுத்தாமல் இருந்தன.
- ஆயுஷ்மான் பாரத் திட்டமானது, ஒன்றோடொன்று தொடர்புடைய வகையில் இரண்டு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.
- முதலாவது திட்டமானது, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையம், இரண்டாவது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா ஆகும்.
- இந்தத் திட்டம் ஆனது, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு மூன்று

நாட்களுக்கு முன் நோயறிதலுக்கான செலவுகளுக்கும், மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட பிறகு 15 நாட்கள் வரையிலான மருந்துச் செலவுகளுக்குமான சில ஆதரவுகளை உள்ளடக்கியது.

- இந்தத் திட்டத்தின் கீழ், முக்கிய பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகள் உட்பட 27 வகையான சிறப்பு மருத்துவத் துறைகளில் தோராயமாக 2,000 சிகிச்சை முறைகள் சேர்க்கப் பட்டுள்ளன.





## அணுசக்தி ஆணையம் 2025

- இந்திய அரசாங்கம் ஆனது, T.V. சோமநாதன் மற்றும் மனோஜ் கோவில் ஆகியோரை உள்ளடக்கிய அணுசக்தி ஆணையத்தினை (AEC) மறுசீரமைத்துள்ளது.

- அணுசக்தித் துறையின் செயலாளர் அஜித் குமார் மொஹந்தி மறுசீரமைக்கப்பட்ட AEC ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.
- இந்த ஆணையத்தில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பிரதமரின் முதன்மைச் செயலாளர் பிரமோத் குமார் மிஸ்ரா, வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, சோமநாதன் மற்றும் கோவில் ஆகியோர் பதவிவழி உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.
- பாபா அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் விவேக் பாசினும் இந்த ஆணையத்தின் பதவி வழி உறுப்பினராக உள்ளார்.

## 30 GW அளவிலான பசுமை சார் ஆற்றல் 2024





- கடந்த ஆண்டு இந்தியா புதிதாக சுமார் 30 GW (ஜிகாவாட்) அளவிலான புதுப்பிக்கத் தக்க ஆற்றல் உற்பத்தி திறனை நிறுவியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 13.75 GW என்ற அளவுடன் ஒப்பிடும் போது இது 113 சதவீதம் அதிகமாகும்.
- இந்த விரிவாக்கத்துடன், இந்தியாவின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் ஆனது 218 ஜிகாவாட்டினை எட்டியுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 GW அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனை அடைவதை இந்தியா இலக்காக நிர்ணயித்துள்ளது.
- இந்த இலக்கை அடைவதற்கு, இந்தியா அடுத்த ஆறு ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது 50 GW அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை நிறுவ வேண்டும்.

## தேசிய நதிப் போக்குவரத்து மற்றும் வழிசெலுத்தல் அமைப்பு

- உள்நாட்டு நீர்வழி மேம்பாட்டுச் சபையின் இரண்டாவது கூட்டம் ஆனது இந்திய உள் நாட்டு நீர்வழி ஆணையத்தினால் (IWAI) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்வின் போது, தேசிய நதிப் போக்குவரத்து மற்றும் வழிசெலுத்தல் அமைப்பு (NRT&NS) ஆனது தொடங்கப்பட்டது.
- உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நீடித்த நிலைத் தன்மையை நவீனமயமாக்குவதையும் மேம்படுத்துவதையும் இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் தேசிய நீர்வழிகளில் வழிசெலுத்தலை மேம்படுத்த இது நிகழ்நேரத் தரவு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

- இந்தியாவில் 14,500 கிலோ மீட்டர் தொலைவிலான பரந்த நீர்வழிப் போக்குவரத்து வலையமைப்பு உள்ளது என்ற நிலையில் இதில் சுமார் 111 அறிவிக்கப்பட்ட தேசிய நீர்வழிகளும் (NWs) அடங்கும்.




## "போதைப்பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பு" குறித்த பிராந்திய மாநாடு




- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியமானது புது டெல்லியில் இந்த மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- வட இந்தியாவின் எட்டு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் சிறப்பு கவனம் செலுத்துவதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பில் அதன் தாக்கம் குறித்து அதிகரித்து வரும் கவலையைச் சமாளிப்பதில் இது கவனம்

செலுத்தியது.

- 2024 ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் உள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (NCB) மற்றும் காவல்துறை படைகள் ஆனது 16,914 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளன என்ற ஒரு நிலையில் இது சுதந்திரம் பெற்றதிலிருந்து கைப்பற்றப் பட்ட மிக அதிகபட்ச அளவாகும்.
- 2004 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 3.63 லட்சம் கிலோகிராம் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.
- 2014 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் அளவு ஏழு மடங்கு அதிகரித்து 24 லட்சம் கிலோகிராமாக உயர்ந்துள்ளது.

## அம்ரித் பாரத் இரயில்கள் 2.0

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, அம்ரித் பாரத் இரயில்களின் மேம்படுத்தப்பட்ட வடிவத்தினை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.
- அம்ரித் பாரத் 2.0 என்று அழைக்கப்படுகின்ற இது குளிரூட்டப்படாத பெட்டிகளைக் கொண்ட இரு முனைகளிலும் இரயில் என்ஜின்கள் இணைக்கபட்ட LHB இரயில் ஆகும்.
- தற்போது, இந்திய இரயில்வே நிர்வாகத்தினால் இரண்டு அம்ரித் பாரத் இரயில்கள் இயக்கப் படுகின்றன என்ற நிலையில் அதில் ஒன்று டெல்லியின் ஆனந்த் விஹார் மற்றும் பீகாரின் தர்பங்கா இடையேயும் மற்றொன்று மேற்கு வங்கத்தின் மால்டா மற்றும் பெங்களூரு இடையேயும் இயக்கப் படுகின்றன.




# சர்வதேசச் செய்திகள்

## உலகின் முதல் CAES அமைப்பு

- "நெங்சு-1" எனப்படும் 300 மெகாவாட் திறன் கொண்ட உலகின் முதல் சிறு அழுத்தப் பட்ட காற்று ஆற்றல் சேமிப்பு (CAES) நிலையமானது சீனாவில் முழு திறன் கொண்ட மின் பகிர்மானக் கட்டமைப்பு இணைப்பை அடைந்துள்ளது.
- ஒற்றை-அலகு மின்சாரம், ஆற்றல் சேமிப்பு அளவு மற்றும் ஆற்றல் மாற்றத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் திட்டம் மூன்று உலக சாதனைகளை படைத்து


உள்ளது.

- CAES என்பது குறுகிய கட்டுமானக் காலங்கள், அதிக மின் உற்பத்தி, நீடித்த காலம், பாதுகாப்பு மற்றும் நீண்டச் செயல்பாட்டுக் காலம் போன்ற நன்மைகளைக் கொண்ட ஒரு வளர்ந்து வரும் தொழில்நுட்பமாகும்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## காதிரைச்சல் உணர்வினை ஈடுசெய்யும் சாதனம்




- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, மிகவும் துல்லியமான காதிரைச்சல் (Tinnitus) ஒலி உணர்வினை ஈடு செய்யும் சாதனம் மற்றும் தனிப் பயனாக்கக் கூடிய தீர்வு (கைபேசி அடிப்படையிலான மென்பொருள்) ஆகியவற்றை மலிவு விலையில் உருவாக்கியுள்ளது.
- டைன்னிடஸ் என்பது எந்த வெளிப்புறத் தூண்டுதலும் இல்லாத நிலையில் மிகை ஒலி உணர்தல் ஆகும்.
- இது கடுமையான தூக்கக் கலக்கம், மனச்சோர்வு, பதட்டம், மன ஆரோக்கியத்தில் பாதிப்பு, எரிச்சல் மற்றும் சமூக வாழ்க்கையைப் பாதித்தல் ஆகியவற்றினை மிகப் பெருமளவு ஏற்படுத்துகிறது.

- ஒட்டு மொத்தமாக டைன்னிடஸ் ஆனது, வாழ்க்கைத் தரத்தில் ஒரு மனச்சோர்வை ஏற்படுத்தும் வகையிலான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- டைன்னிடஸ் என்பது உலகளவில் 740 மில்லியனுக்கும் அதிகமான வயது வந்தோரைப் பாதிக்கிறது என்பதோடு 120 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனையாக இது கருதப்படுகிறது.

## புதிய தேடல் மற்றும் மீட்பு உதவி கருவி

- இந்திய தேசிய கடல் சார் தகவல் சேவைகள் மையம் (INCOIS) ஆனது அதன் சொந்தத் தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியின் (SARAT) புதிய வடிவத்தினை உருவாக்கி உள்ளது.
- இது 'சிறந்த துல்லியத்தன்மை மற்றும் பயன்பாட்டை' வழங்குவதோடு, இந்தியக் கடலோரக் காவல்படை போன்ற இந்திய தேடல் மற்றும் மீட்பு (SAR) நிறுவனங்களுக்கு அவற்றின் கடல் சார் நடவடிக்கைகளில் உதவும்.
- இந்த SARAT செயலி ஆனது மனிதர்கள் உட்பட கடலில் தொலைந்து போன பல்வேறு பொருட்களின் சாத்தியமான தேடல் பகுதியை உருவகப்படுத்தக் கூடியது.
- 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட SARAT கடலோரக் காவல்படையினால் அதன் கடல் சார் தேடல் நடவடிக்கைகளில் பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## கானமயில் வளங்காப்பு – இராஜஸ்தான்

- இராஜஸ்தானில் உள்ள காடுகளில் ஒரே குழுவில் குறைந்தது 12 கானமயில்கள் (GIB) தென்பட்டுள்ளன.
- வடக்கு மற்றும் மேற்கு இந்தியப் பகுதிகளில் "கோடவன்" மற்றும் "மால்தோக்" என்று அழைக்கப் படும் இந்தப் பறவைகள், டெசர்ட்/பாலைவன தேசியப் பூங்காவில் (DNP) தென்பட்டுள்ளன.


- GIB என்பது இராஜஸ்தானின் தார் பகுதியில் காணப்படும் மிக அருகி வரும் பறவை இனமாகும்.
- இன்று, 173 பறவைகள் மட்டுமே எஞ்சியுள்ளன, அவற்றில் 128 பறவைகள் காடுகளில் காணப்படுகின்றன என்ற நிலையில் மீதமுள்ளவை உயிர்க் காப்பகங்களில் மட்டுமே வளர்க்கப் படுகின்றன.
- இராஜஸ்தானைத் தவிர, குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலும் இந்தப் பறவை காணப்படுகிறது.
- 2011 ஆம் ஆண்டில், இந்தப் பறவைகள் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "மிக அருகி வரும் நிலையில் உள்ள இனமாக" பட்டியலிடப்பட்டன.





## INROAD திட்டம் 2025

- வடகிழக்கில் மேற்கொள்ளப்படும் INROAD திட்டம் ஆனது இயற்கை ரப்பரின் தரத்தை மேம்படுத்துவதற்காக 100 கோடி ரூபாய் நிதி உதவியைப் பெற்றுள்ளது.
- INROAD என்பது உதவிகளுடன் கூடிய வளர்ச்சிக்கான இந்திய இயற்கை ரப்பர் செயல் பாடுகள் என்பதைக் குறிக்கிறது.
- INROAD என்பது உலகிலேயே ரப்பர் தோட்டங்களின் உருவாக்கத்திற்கு டயர் / உருளிப் பட்டைகள் தொழில் துறை நேரடியாக பங்களிக்கும் முதல் வகையிலான திட்டமாகும்.

- அப்பல்லோ, சியட், JK மற்றும் MRF உள்ளிட்ட நான்கு ATMA உறுப்பினர்களால் இந்தத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது, மேலும் இது இந்திய ரப்பர் வாரியத்தினால் செயல்படுத்தப்படுகிறது.




## எலி வளை நிலக்கரிச் சுரங்கம் – அசாம்




- சமீபத்தில் அசாமில் உள்ள டிமா ஹசாவோ மாவட்டத்தில், நீர் சூழ்ந்த எலி வளை நிலக்கரி சுரங்கத்தில் (கை முறை துளையிடுதல்) சில தொழிலாளர்கள் சிக்கி உயிர் இழந்தனர்.
- இது வடகிழக்கின் சில பகுதிகளில் பரவலாக உள்ள ஓர் அறிவியல் பூர்வமற்ற மற்றும் சட்டவிரோத சுரங்க முறையாகும்.
- ஒரு நபர் மட்டுமே செல்லும் வகையில் இந்தச் சுரங்கப்பாதைகள் மிகவும் குறுகலாக இருப்பதால் இது எலி வளைச் சுரங்கம் என்று அழைக்கப்படுகிறது.
- இந்த நிலத்தடிப் பாதைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன, இருந்தாலும் சுரங்கங்கள் இடிந்து விழும் போது அல்லது வெள்ளத்தில் மூழ்கும் போது அவை தொழிலாளர்களுக்கு ஒரு பொறிகளாகின்றன.
- 2014 ஆம் ஆண்டில், தேசியப் பசுமை தீர்ப்பாயம் (NGT) எலி வளைச் சுரங்கத்தைத் தடை செய்தது.

## புருலியா ஆய்வகம்

- S.N.போஸ் அடிப்படை அறிவியல் மையத்தினால் (SNBCBS) மேற்கு வங்காளத்தில் உள்ள

பஞ்செட் மலையின் உச்சியில் இந்த ஆய்வகம் நிறுவப்பட்டது.

- தரை மட்டத்திலிருந்து 600 மீட்டர் உயரத்திலும், தோராயமாக 86° E தீர்க்கரேகையிலும் இந்த ஆய்வகம் அமைந்துள்ளது.
- இது கிழக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளவிலும் ஒரு முக்கிய ஆய்வகமாக இருக்கும்.



## முக்கிய தினங்கள்

### தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2025




- தேசிய சாலைப் பாதுகாப்பு வாரமானது, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலை அமைச்சகத்தினால் (MoRTH) ஏற்பாடு செய்யப்பட்டது.
- தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் ஆனது முதன்முதலில் 1989 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப் பட்டது.

- சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இது ஆண்டுதோறும் ஜனவரி 11 முதல் ஜனவரி 17 ஆம் தேதி வரை அனுசரிக்கப்படுகிறது.
- இந்த வார அளவிலான அனுசரிப்பானது, மக்கள் தாங்கள் மேற்கொள்ளும் பயணம் முழுவதும் சாலைப் பாதுகாப்பைப் பேணுவதற்கான ஒரு கூட்டுப் பொறுப்பு குறித்து அவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Be a Road Safety Hero' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★